(**CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE**)

**IN THE COURT OF THE I ADDL.DIST. & SESSIONS COURT, MADURAI.**

**DEPOSITION OF WITNESS FOR PROSECUTION / DEFENCE**

**O.S.NO.281/2018 P.W-2**

Name : நீதிஅரசு
Father's name :
Village :
Taluk :
Caste :
Religion :
Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 19.11.2019.

**முதல் விசாரணை:-**

நான் மதுரையில் நரம்பியல் பிரிவில் மருத்துவராக தொழில் செய்து வருகிறேன். சாட்சி சொல்ல அழைப்பாணை வந்தது. நான் மதுரையில் முன்னணி நரம்பியல் மருத்துவர் என்றால் நான் கடந்த 25 ஆண்டுகளாக தொழில் செய்து வருகிறேன். மூளை சம்பந்தமான நோய்கள் மற்றும் நரம்பியல் சம்பந்தமான நோய்கள் ஆகியவற்றிற்கு சிகிச்சை அளிக்கிறேன். நான் மதுரை சிவகங்கை சாலை கதவு எண்.29 ஏ -ல் மருத்துவமனை 12 ஆண்டுகளாக நடத்தி வருகிறேன். நடுங்கு வாதம் (Parkinson) நோயைப் பொறுத்த வரையில் பல நிலைகள் உள்ளன என்றால் சரிதான். முற்றிய நிலையை அடைவதற்கு ஆரம்ப காலத்தில் இருந்து எவ்வளவு நாட்கள் ஆகும் என்றால் அந்த நோயாளியின் ஆரோக்கியத்தன்மையை பொறுத்தது. பொதுவாக குறைந்தபட்சம் 7 முதல் 12 ஆண்டுகள் வரை ஆகும். முற்றிய நோய் இருப்பவர்களுக்கு ஞாபகமறதி இருக்குமா என்றால் கட்டாயமில்லை. அல்சிமர் என்பது ஆரம்பநிலையிலேயே நோயாளி ஞாபகமறதியில்தான் இருப்பார். மதுரை மேலூர் வட்டம், மேலூர் நகரம், மில்சாலை, கதவு எண்.154 ல் வசித்து வந்த பிச்சன்செட்டியார் மகன்

கருப்பன்செட்டியார் என்பவர் என்னிடம் எடுத்துக் கொண்ட சிகிச்சை பற்றி எனக்கு நினைவு உள்ளது என்றால் என்னிடம் அதற்கான ஆவணங்கள் இல்லை.

குறுக்குவிசாரணை - இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு அதை தட்டெழுத்தாளருக்கு என்னால் சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் வாசித்துப் பார்க்கப்பட்டு/ சாட்சிக்கு வாசித்துக்காண்பித்து அதை சரியென்று ஒப்புக்கொண்டு சாட்சி கையெழுத்திட்டார்/ கையொப்பமிட்டார்.

முதலாவது கூடுதல்
மாவட்ட நீதிபதி,
மதுரை.